# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Website : www.tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண்.23/2015**

திருமதி. D. ஞானஜோதி (ஆசிரியர் பணிநிறைவு),
க/பெ. தங்க குண்டு,
56, சி.எஸ்.ஐ. வீதி,
நசியனூர்,
ஈரோடு மாவட்டம் . . . மேல்முறையீட்டாளர்
(திரு. தங்க குண்டு, ஆசிரியர்/பணி நிறைவு)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
ஈரோடு மின்பகிர்மான வட்டம்,
ஈரோடு – 9 . . . எதிர்மனுதாரர்
(திரு.பி.மகேந்திரன்/உதவி செயற்பொறியாளர்/ மேற்கு/ஈரோடு
மற்றும் திரு.அன்பு செழியன், உதவிப்பொறியாளர்/ நசியனூர்)

**கேட்புரை நாள் 6–5–2015**

**ஆணை நாள் 6–8–2015**

திருமதி. டி. ஞானஜோதி (ஆசிரியை, பணிநிறைவு), நசியனூர் அவர்களின் 21–2–2015 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.23/2015 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுவின்மீது கேட்புரை 6–5–2015 அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பாக நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர் மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் கேட்புரையின் பொழுது இருதரப்பினராலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

அவர்களது நிலத்தில் வீடுகட்டுவதால் சர்வே எண்.483/9 ல் உள்ள மின் ஒயரை அப்புறப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

2. <u>வழக்கின் சுருக்கம்</u>:

2.1 மேற்முறையீட்டாளர் திருமதி.D. ஞானஜோதி, நசியனூர் அவர்கள் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆகும்.

2.2 திருமதி எஸ்தர் அவர்களின் மின் இணைப்பு எண் 007–006–734 இன் சர்வீஸ் வயர், அவருக்கு சொந்தமான சர்வே எண் 483/9 ன் வழியாக செல்வதால் அதனை மாற்றியமைக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

2.3 மேற்கண்ட சர்வீஸ் வயரை மாற்று பாதையில் திருமதி. எஸ்தரின் வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க ஆட்சேபனை உள்ளதால், அந்த சர்வீஸ் வயரை மாற்ற முடியவில்லை என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.4 மேல்முறையீட்டாளர் தன்னுடைய கோரிக்கையை ஈரோடு மின்பகிர்மான வட்டத்திற்கு சமர்பித்துள்ளார். மேல்முறையீட்டாளரின் மனுவை தன்னுடைய 7–2–2015 நாளிட்ட ஆணையில் மன்றம் தள்ளுபடி செய்துள்ளது. எனவே மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்பாளரிடம் சமர்பித்துள்ளார்.

3. <u>மன்றத்தின் தீர்வு</u> :

3.1 ஈரோடு மின்பகிர்மான வட்டம், தன்னுடைய தீர்வை 7–2–2015 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தபட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"முடிவுரை : மனுதாரரின் கோரிக்கையையும், அதற்காக கழகத்தரப்பினரது அறிக்கை மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றையும் கூர்ந்து ஆராய்ந்து பார்த்ததில் திருமதி. எஸ்தர் அவர்களது மின் இணைப்பு எண் 007 006 374ன் சர்வீஸ் வயரை இடமாற்றம் செய்வதற்கு மனு அளித்த திருமதி. ஞானஜோதி அவர்களின் சார்பாக அவரது கணவர் திரு. தங்க குண்டு அவர்கள் மூலம் மன்ற கூட்டத்தில் கலந்து கொண்டு (1) மனுதாரர் திருமதி.ஞானஜோதி அவர்கள் தன்னுடைய பிரதிநிதியான அவரது கணவருடன் திரு . தங்க குண்டு அவர்களின் மூலம் மாற்றுப் பாதையில் சர்வீஸ் வயரை கொண்டு செல்வதற்கு மனுதாரரே ஆட்சேபனை தெரிவிப்பதாலும் (2) அப்பகுதியில் உள்ள சர்வே எண்கள் கொண்ட இடங்களுக்கான வழித்தடம் தொடர்பான ஈரோடு மண்டல துணை வட்டாட்சியர் அவர்களின் முன் 22–5–2007 நாளிட்ட சம்மத வாக்குமூலத்தின் படி நடைமுறைப்படுத்தப்படாமல் சரியான நடைபாதை வசதி இல்லாததாலும் (3) ஆட்சேபணை காரணமாக வேறு வழியில் சர்வீஸ் வயரை எடுத்துச் செல்ல முடியாத காரணத்தாலும் அச்சர்வீஸ் வயரை மாற்றுப் பாதையில் கொண்டு செல்ல மனுதாரர் மாற்று வழி காண்பித்தாலோ அல்லது வருவாய் துறையினர் முன் அளிக்கப்பட்ட வாக்குமூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு பொது நடைப்பாதையை நிர்ணயம் செய்யப்பட்டாலோ தான் மனுதாரர் கோரியபடி மின் இணைப்பு எண் 077 006 374 –ன் சர்வீஸ்*

*வயரை மாற்றி அமைக்க இயலும் என்பதால் மனுதாரர் மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்திற்கு சமர்ப்பித்த (19–12–2015 அன்று பெறப்பட்ட) மனுவை தள்ளுபடி செய்து இம்மன்றத்தின் மூலம் இறுதி உத்தரவு வழங்குகிறது.''*

**4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>**

**4.1** திரு. சத்தியஜோதி என்பவர் அவர் வீட்டிற்கு தற்போது சர்வீஸ் எண் **374** சர்வே எண் **483/9** ன் கூரைகொட்டகையின் மீது வயர் இழுத்து கம்பத்தில் கட்டிவிட்டார். கொட்டகை அவர்களுடையது. எனவே, அவர் மின் இணைப்பு சத்திய ஜோதிக்கு கொடுக்கக் கூடாது என்று இளம்மின் பொறியாளருக்கு மனுச் செய்து விட்டார். பின்பு நசியனூர் இளம் மின் பொறியாளரின் யோசனைபடியும் பஞ்சாயத்தார் அறிவுரையின்படியும் ஒப்பந்தம் எழுதிக் கொடுத்து மின் இணைப்பு வழங்க **4.12.1987** அனுமதி கொடுத்தார்.

**4.2** **1991**ல் நத்தம் சர்வே வந்தது திரு. சத்தியஜோதி அவர்களுக்கு கையூட்டுக் கொடுத்து மேல்முறையீட்டாளரின் நிலத்தில் கிழ.மேலாக பாதை **483/6** எனப் போடச் சொல்லிவிட்டார். அது மட்டுமல்ல குடிநீர் இணைப்பு பைப்பும் அந்த வழியாகப் போட்டுவிட்டார், பின்பு அவரால் தடை செய்யப்பட்டது.

**4.3** இதற்கிடையில் சத்திய ஜோதி இளம்வயதில் காலமாகிவிட்டார். அதன்பின்பு சத்தியஜோதியின் மனைவி மகன் சத்திய சீலன் இருவரும் மேல்முறையீட்டாளர் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள்.

**4.4** OS No.1442/04 என்ற வழக்கிற்கு நீதிமன்ற தீர்ப்பு வந்தது. இதில் குடிநீர் இணைப்பு, மின் இணைப்பு நடக்க வழி, அவர்கள் கட்டிய வீடு இவைகள் அனைத்தும் திருமதி எஸ்தருக்கு எதிராக தீர்ப்பு ஆகிவிட்டது. அவர்கள் **483/6**ல் வீடுகட்டி மின் இணைப்பும் பெற்றுவிட்டார்கள். வீட்டுவரியும் செலுத்தி ரசீது பெற்றுவிட்டார்கள்.

**4.5** **1972** ஆண்டு அவரது மாமனார் மற்றும் அவரது மனைவியின் அப்பா (மற்றும்) ஜோதி இவர்களுக்கு HD பட்டா 7/5/81 ல் கொடுத்தபோது அவர்கள் நிலத்தில் பாதை இருந்தால் எஸ்தரின் வீட்டுக்கு மின் இணைப்பு அந்த பாதை வழியாக எடுத்திருப்பார்கள் ? அந்நிலையில் அவர்களுக்கு பஞ்சாயத்து ஒப்பந்தம் எழுதிக் கொடுக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது.

**4.6** எஸ்தரின் வீடு வடக்கு வாசல் கொண்டதாகும். அவரின் தடம் தனியாக உள்ளது. கிழ.மேல் வீதியில் இருந்த தென் வடலாக பாதை அமைந்துள்ளது. வடக்கே **5** அடி அகலம், புல எண் **1**, தெற்கே **4** அடி அகலம், புல எண்.**483/3** அவர்கள் தெருவில் பத்து வீட்டுக்கு தடம் அகலமே **2** அடிகள் தான்.

4.7 அவர்கள் நிலத்தில் வீடு கட்டுவதால், 483/9 ல் உள்ள மின் வயரை அப்புரப்படுத்தும்படி வேண்டியும் கடந்த 3 வருடங்களாக மன உளைச்சலுக்கு ஆளான அவர்களை மீண்டும் அலையவிடாமல் நல்ல தீர்ப்பினை வழங்குமாறு பணிவுடன் வேண்டுகின்றார்.

5. <u>எதிர் மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>:

5.1 நகரியம் /ஈரோடு கோட்டம் மேற்கு/ஈரோடுஉபகோட்டம் நசியனூர் பிரிவு அலுவலகத்திற்கு உட்பட்ட மின் இணைப்பு எண்.007–006–374 என்பது திரு. என். சத்தியஜோதி, கதவு எண்.424, CSI வீதி, நசியனூர் என்பவர் பெயரில் 30.1.1988 அன்று வழங்கப்பட்டது. அம்மின் இணைப்பு 29.7.2010 அன்று திருமதி. எஸ். எஸ்தர், க/பெ திரு. என். சத்தியஜோதி பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

5.2 அம்மின் இணைப்பின் சர்வீஸ் வயர் திருமதி. ஞானஜோதி அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கிய மின் கம்பம் எண்.11/2ல் இருந்து திருமதி. ஞானஜோதி அவர்களுக்கு சொந்தமான சர்வே எண்.483/9 இடத்தின் வழியாக மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

5.3 திருமதி. ஞானஜோதி அவர்களின் கணவர் திரு. தங்ககுண்டு அவர்கள் 22.1.2015 அன்று மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றக் கூட்டத்தில் திருமதி. எஸ்தர் அவர்களும் தானும் நெருங்கிய உறவினர்கள் என்பதால் திருமதி. எஸ்தர் அவர்களின் வீட்டிற்கு மின் இணைப்பு எண்.007–006–374 பெறும் பொழுது சர்வீஸ் வயர் தனது இடமான சர்வே எண்.483/9ன் வழியாக கொண்டு செல்வதற்கு சம்மதம் தெரிவித்தும், அதன் பிறகு தான் இவ்விடத்தில் வீடு கட்டும்பொழுது திருமதி. எஸ்தர் அவர்கள் தனது சொந்த செலவில் சர்வீஸ் ஒயரை வேறு பாதையில்மாற்றி அமைத்து கொள்ள வேண்டும் என்று ஏற்கெனவே ஓர் ஒப்பந்தம் செய்து எழுதிக்கொண்டுள்ளதாக மன்றத்தில் தெரிவித்தார்.

5.4 (i) தற்பொழுது திரு. தங்ககுண்டு அவர்கள்அந்த சர்வீஸ் ஒயரை மாற்றி அமைப்பதற்கு இரண்டு வழிகள் மன்றத்தில் தெரிவித்தார். திரு. எஸ்தர் அவர்கள் இது வரை அவரது வீட்டிற்கு நடைபாதையாக ரீ. சர்வே எண்.483/1,3,4 இன் வழியாகத்தான் பயன்படுத்தி வருகிறார்கள். மேற்படி சர்வீஸ் வயர் இன்று வரை தனது சர்வே எண்.483/9 என்ற தனது வீட்டு மனை இடத்தின் வழியாக தான் செல்கிறது. அந்த சர்வூஸ் வயர் மின் கம்பம் E11/2ல் இருந்து செல்கின்றது. அதை ரீ சர்வே எண்.483/1ல் அமைந்த E11/1 என்ற கம்பத்திற்கு மாற்றி அமைத்து அதிலிருந்து 483/4, 483/5 இன் இடையே அமைத்து செல்ல சம்மதிக்கிறேன் என்றும், இதில் சர்வே எண்.483/5 என்பது தனக்கு பாத்தியப்பட்டது என்பதால் அதில் 2 அடி அகலத்திற்கு நடைபாதை விடுவதாகவும்சர்வே எண்.483/4 என்பது நீதி மன்ற தீர்ப்பின்படி தனக்கு பாத்தியப்பட்டது என்பதால் அதில் 2அடி நிலம தருவதாகவும் ஏற்கனவே ரீ சர்வே எண்.483/3ல் 2

இரண்டு அடி உள்ளது. எனவே, மேலும், ரீ சர்வே எண்.483/3இன் ஓரம் ரீ சர்வே எண். 483/4–5ல் இரண்டடி விடுவதால் சேர்த்து மொத்தம் 4 (நான்கு) அடி நிலம் உள்ளது என்றும், அதில் சர்வீஸ் வயர் எடுத்துக் செல்லலாம் என்றும் தெரிவித்தார். இதில் சர்வே எண்.483/5ல் 2 அடி நடைபாதை விடுவதற்கு காரணம் ஏற்கனேவ திருமதி. எஸ் எஸ்தர் 21.5.2007 அன்று ஈரோடு மண்டல துணை வட்டாட்சியர் அவர்களது தலைமையில்தானும் திருமதி. எஸ்தர் அவர்களும் ஒப்பந்தம் செய்து கொண்டதாகத் தெரிவித்தார்.

(ii) திருமதி. எஸ்தர் ரீ சர்வே எண்.483/4ல் உள்ள பூமி திரு. அப்பாவு அவர்களுடையது என்றும் அவர் அப்பூமியில் 2 அடி வழங்க மறுப்பு தெரித்துள்ளதாக தெரிவித்தமைக்கு மேற்கண்ட ஒப்பந்தத்தின்படி எனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.483/5ல் எனது எல்லையில் இருந்து 2 அடி ஏற்கனவே தள்ளி இருப்பதால் மீண்டும் 2 அடி தள்ளி எனது கம்பி வேலியை தனது சொந்த செலவில் மாற்றி அமைத்து மொத்தம் 4 அடி பாதை வழி விடுகிறேன் என்றும், மேற்படி சர்வே எண்.483/5 திருமதி. ஞானஜோதி மற்றும் அவரின் சகோதரி திருமதி. புஷ்பகாந்தி அவர்களுக்கு பாத்தியம் இருப்பதாக திருமதி. எஸ்தர் அவர்களால் தெரிவித்தமைக்கு அச்சர்வே எண்ணில் 2 அடி பாதை வழி விடுவதால் திருமதி. புஷ்பகாந்தி அவர்களால் பிற்காலத்தில் இடையூறு செய்தால் இச்சர்வே எண்ணில் தனக்கு பாத்தியப்படும் பகுதியில் இருந்து திருமதி. புஷ்பகாந்தி அவர்களுக்கு அதற்குண்டான நிலத்தை தருவதாகவும் தெரிவித்தார்.

(iii) ரீ சர்வே எண்.483/3இன்ஓரம் ரீ சர்வே எண்.483/5 ல்தான் எழுதிக் கொடுக்கும் இடத்தின் பொதுப்பாதை வழியான ரீ சர்வே எண்.483/14ல் சென்று கொண்டிருக்கும் மின் பாதையிலிருந்து ரீ சர்வே எண்.483/5ன் வடக்கு எல்லையில் கிழ மேற்காக சர்வீஸ் கேபிளை எடுத்து பின்பு 483/5ன் மேற்கு எல்லையில் வடக்கு தெற்காக எடுத்துக் சென்று திருமதி. எஸ்தர் வீட்டிற்கு மின் இணைப்பு வழங்கலாம் என்று எழுதிக் கொடுப்பதாக தெரிவித்தார். தான் எழுதிக் கொடுப்பது மின் இணைப்பு சர்வீஸ் வயர் எடுப்பதற்கு மட்டுமே அந்த வழியாக வேறு எந்த அடிப்படை வசதிகளையும் திருமதி. எஸ்தர் அவர்கள் கேட்கக்கூடாது எனத் தெரிவித்தார்.

5.5 மின்பாதையை மாற்றி அமைப்பதற்கு உண்டாகும் செலவு அனைத்தும் திருமதி. எஸ்தர் அவர்கள் தான் முழுபொறுப்பு ஏற்க வேண்டும். ஏனெனில் அவர் மின் இணைப்பு பெறுவதற்காக அமைக்கப்பட்ட மின்பாதை மேல்முறையீட்டாளர் இடத்தில் வருவதால் அதற்கு சம்மதம் தெரிவித்தும் பிற்காலத்தில் மேல்முறையீட்டாளர் வீடு கட்டுவதாக இருந்தால் மேற்படி மின்பாதையை மின் இணைப்பு உரிமையாளர் தனது சொந்த செலவில் மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளதால் அம்மின் பாதையை மாற்றி

அமைப்பதற்கு திருமதி. எஸ்தர் அவர்கள் தான் முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

5.6 திருமதி. எஸ்தர் அவர்கள் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் தனது வீட்டு மின் இணைப்பு எண்.007–006–374ன் சர்வீஸ் ஒயரை மின் கழகம் தெரிவித்த சர்வே எண்.483/6ல் அமைந்துள்ள பொதுப்பாதையின் வழியாக கொண்டு சென்றால் பொதுப்பாதையின் அகலம் மிகவும் குறைவாக இருப்பதால் அவ்வழியாகக் கொண்டு செல்லும் போது பொது மக்களுக்கு இடையூறாக இருக்கும் என்பதால் இவ்வழியாகக் கொண்டு செல்வதற்குத்தான் சம்மதிக்கவில்லை என்றும், அதனால் இப்பிரச்சைனைக்கு நிரந்தர தீர்வு கிடைக்காது என்று தெரிவித்தார். திருமதி. ஞானஜோதி அவர்கள் சர்வே எண்.483/6 தனக்கு பாத்தியப்பட்டது என்று தெரிவித்தார். ஆனால், வருவாய்த்துறை ஆவணங்களில் சர்வே எண்.483/6 பாதை என்று தான் உள்ளது.

5.7 தற்போது தாழ்வழுத்த மின் பாதை சென்று கொண்டிருக்கும் சர்வே எண்.483/14 திருமதி. ஞானஜோதி அவர்களுக்கு மட்டும்சொந்தம் என்று தெரிவித்துள்ளார். அதற்கான ஆவணங்கள் எதுவும் இணைக்கப்படவில்லை. மனுதாரர் மேல்முறையீட்டு மனுவில் தனது மின் இணைப்பு பெறும்பொழுது தனக்கும் திரு. அப்பாவு அவர்களுக்கும் பொதுப்பாதை இல்லாததால் இருவரும் ஒப்பந்தம் செய்து கொண்டு மின் கம்பம் நட்டு மின் இணைப்பு பெற்றுள்ளதாக தெவித்துள்ள ஒப்பந்தத்தில் சர்வே எண். விவரம் இல்லை. மேலும், OS No.375/1983 தீர்ப்பு நகலில் சர்வே எண் விபரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மேலும், 18.3.2013 நாளிட்ட கிராம நிர்வாக அலுவலரின் சான்றின்படி நத்தம் நிலவரித்திட்ட துய அடங்கல் பதிவேட்டில் நசியனூர் கிராமம் சர்வே எண்.483/14 என்பது பாதை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

5.8 திரு. சத்தியஜோதி அவர்களது மின் இணைப்பு எண்.007–006–374ன் சர்விஸ் வயர் சர்வே எண்.483/9 கொண்டு செல்வதற்கு திரு. தங்ககுண்டு மற்றம் திரு. சத்தியஜோதி அவர்களும் இருவரும் சேர்ந்து தேதி குறிப்பிடாத கடிதம் வாயிலாக ஒப்பந்தம் செய்த கொண்டதின் அடிப்படையில் தான் சர்வே எண்.483/9ன் வழியாக தான் சர்வீஸ் வயர் அமைத்து மின்இணைப்பு 007–006–374 நாள் 30.1.1988ல் வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட மின் இணைப்பு வழங்கும் முன்னர் 1.12.1987ல் மனுதாரரின் கணவர் திரு. தங்ககுண்டு அவர்கள் ஆட்சேபணை செய்ததால் இளமின்பொறியாளர் நசியனூர் அவர்கள் 11.12.1987 நாளிட்ட கடிதத்தில் திரு. தங்ககுண்டு அவர்களுக்கு நிலம் சொந்தம் என்பதற்கான தகுந்த ஆதாரங்களை 7 நாட்களுக்குள் வழங்குமாறும் தவறினால் ஆட்சேபணை மனு தள்ளுபடி செய்யப்படும் எனவும் தெரிவித்துள்ள விவரம்மேல்முறையீட்டாளரது மனுவில் வழங்கிய

இணைப்பிலிருந்து தெரியவருகிறது. மேலும் 22.1.2015 அன்று மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் விசாரணையில் இப்பதிலுரை பத்தி3இல் தெரிவித்தவாறு ஒப்பந்தம் மேற்கொண்டதன் அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், எந்தச் சர்வே எண்ணில் இருக்கும் பூமி வழியாக மின் இணைப்பு வழங்கலாம் என்பது பற்றிய தகவல் ஒப்பந்தத்தில் இல்லை.

5.9 மனுதாரரும், திருமதி. எஸ்தர் குடும்பத்தாரும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி மின் இணைப்பு வழங்க 4.12.1987ல் அனுமதி கொடுத்ததாக கூறியுள்ளார். திருமதி. ஞானஜோதி அவர்களது 18.12.2014 நாளிட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற மனுவிற்கு 22.1.2015 அன்று மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் விதிமுறைகளின்படியும் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் திருமதி. எஸ்தர் அவர்கள் மின் கழகம் தெரிவித்த சர்வே எண்.483/6ல் அமைந்துள்ள பொது பாதையின் வழியாக கொண்டு செல்வதற்கு சம்மதிக்கவில்லை. ஏனெனில் பொது பாதையின் அகலம் மிகவும் குறைவாக இருப்பதால் அவ்வழியாக கொண்டு சென்றால் பொது மக்களுக்கு இடையூறாக இருக்கும் மேலும் இவ்வழியாக கொண்டு செல்வது இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வாக இருக்காது என்று தெரிவித்தனர். மேலும், செயற் பொறியாளர் நகரியம், ஈரோடு அவர்களும் 483/6 என்பது கிராம நிர்வாக அலுவலரின் சான்றின்படி பொதுப்பாதை என உள்ளதால் இவ்வழியே மாற்றி அமைக்கலாம் என்று விசாரணையில் தெரிவித்தார். திருமதி. எஸ்தர் அவர்களை விசாரித்தபொழுது அவர் அப்பாதை வழியே சர்வீஸ் ஒயரை எடுத்துச் செல்லச் சம்மதம் தெரிவிக்காததால் 483/6ன் வழியே மாற்றி அமைக்க இயலவில்லை. இக்காரணம் குறித்து 22.1.2015 அன்றே மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற இறுதி அறிக்கையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இதில் 077–006–374 மின் இணைப்பு அமைந்த வீட்டில் குடியிருந்தும் அம்மின் இணைப்பிற்கான மின் நுகர்வு கட்டணம் செலுத்தப்பட்டு வருகின்ற நிலையில் குடியிருப்புதாரர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்காத வகையில் மாற்று வழி காண்பித்தால் மட்டுமே சர்விஸ் வயர் மாற்றி அமைக்க இயலும் எனத் தெரிவித்துள்ளதின் பேரில் நடுநிலையோடு கழக விதிகளுக்குப்பட்டு எவ்வித பாகுபாடின்றியும் மேலும் எவ்வித உள்நோக்கமின்றியும் கழகத்தரப்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு வீட்டிற்கு நடைபாதையே இல்லாமல் சர்வீஸ் ஒயரை மாற்ற முகாந்திரமே எதுவும் இல்லாததால் கழகம் மனுதாரர் மனு மீது எவ்விதமாகவும் நடவடிக்கை மேற்கொள்ள இயலாது என்பது திண்ணம்.

**5.10** நீதிமன்ற வழக்கு எண். OS No.1442/2004ல் உத்தரவின்படி சர்வே எண்.483/6 மேல்முறையீட்டாளருக்கு பாத்தியப்பட்டது என்று தெரிவித்துள்ளார். ஆனால், அதற்கான வருவாய் ஆவணங்கள் எதுவும் மன்றத்தில் அளிக்கப்படவில்லை. மேலும், வருவாய்த்துறை ஆவணங்களின்படி சர்வே எண்.483/6 என்பது பொதுப்பாதை என்றே உள்ளது.

**5.11** திருமதி. எஸ்தர் அவர்களின் வீட்டு மின் இணைப்பு எண்.007–006–374ஐ பெறும்பொழுது திரு.தங்ககுண்டு அவர்களின் ஒப்பந்தப்படி தான் சர்வே எண்.483/9 இன் வாயிலாக அமைப்பதற்குச் சம்மதம் தெரிவித்ததன் அடிப்படையில்தான் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், மேல்முறையீட்டு மனுவில் இணைக்கப்பட்ட ஆவணங்கள் எதுவும்மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மனறத்தில் அளிக்கப்படவில்லை. மேலும், வழக்கு எண்.OS No.1442/2004இன் உத்தரவில் எஸ்தர் மற்றும் 3 நபர்கள் சர்வே எண்.483/6 என்பது பொதுப்பாதை என்பதற்கான ஆதாரங்கள் வழங்ககாததால் நீதிமன்ற உத்தரவில் *considering all the above things as RS No483/6 also form apart of third item of Gift settlement deed executed in favour of the first and second defendants and as there is no proof show that the plaintiffs have got any pathway rigth over the same by any means it is here by decided that the plaintiffs have no right or interest over S.No.483/6 and in consequence it is decided that the plaintiffs are not entitled to the relief of mandatory injunction as prayed for. Accordingly this issue is agaisnt the plaintiffs எனஉத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில் 22.1.2015 அன்று விசாரணையில்* மேற்படி சர்வே எண்.483/6 தனக்கு தான் பாத்தியப்பட்டது என திரு. தங்ககுண்டு தெரிவித்தால் அச்சர்வே எண். வழியாக சர்வீஸ் வயர் கொண்டு செல்வதைக் தவிர்க்கும் பொருட்டு மனுதாரரை மாற்று வழி அமைத்து தர கோரப்பட்டது. மேலும், மனுதாரரது மனு தொடர்பாக அனைத்து வகையிலும் ஆராயப்பட்டு கழக விதிகளின்படி விசாரணை மேற்கொள்ளப்பட்டு உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**5.13** மேலும், மனுதாரரது பிரதிநிதி திரு. தங்ககுண்டு அவர்கள் தனக்கு court orderபடி புல எண்.483/4 பாத்தியம் என்றும், பின்பு இல்லை என்றும், தெரிவித்து மற்றும் புல எண்.483/5ல் தனக்கு மட்டும் பாத்தியம் என்று கூறி பிறகு திருமதி. புஷ்பகாந்தி அவர்களுக்கும் பாத்தியம் என்று கூறுவது ஆகிய இவை அனைத்தும் முன்னுக்கு பின் முரண்பாடாகவே தெரிவிக்கிறார். மேலும், ஈரோடு மண்டல துணை வட்டாட்சியர் அவர்களது ஆய்விலும் புல எண்.483/4 என்பது தனக்கே எனக் கூறி 2 அடி வழித்தடம் தருவதாக தவறான வாக்குறுதியை அளித்து பின்பு அதனையும் திரும்பப் பெற்றுக் கொண்டு மாற்றுப் பாதையை சர்விஸ் கொண்டு செல்ல அனுமதிக்கவில்லை. ஆனால், கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் வழங்கிய நத்தம்

நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேட்டின் நகல்படி புல எண்.483/3 என்பது திரு. ரத்தினசாமி என்பவருக்கும் புல எண். 483/4 என்பது திரு. அப்பாவு என்பவருக்கும் புல எண்.483/5 என்பது திருமதி. ஞானஜோதி என்பவருக்கும் பாத்தியப்பட்டதாக தெரிய வருகிறது. எனவே, வேறு மாற்றுப் பாதையை மனுதாரரால் தெரிவித்தால் மட்டுமே மேற்படி சர்வீஸ் வயரை இட மாற்றி அமைப்பதற்கு சாத்தியக்கூறு ஏற்படும்.

5.14 எனவே, திருமதி. எஸ்தர் அவர்களது மின் இணைப்பு எண்.007–006–374இன் சர்வீஸ் ஒயரை இட மாற்றம் செய்யக்கோரி மனு அளித்த திருமதி. ஞானஜோதி அவர்களின் சார்பாக அவரது கணவர் திரு. தங்ககுண்டு அவர்கள் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற கூட்டத்தில் கலந்து கொண்டு சர்வே எண்.483/6 மாற்றப்பாதையில் சர்வீஸ் ஒயரை கொண்டு செல்வதற்கு மனுதாரரே ஆட்சேபணை தெரிவிப்பதாலும் அப்பகுயில் உள்ள 483/3, 4 மற்றும் 5 சர்வே எண்கள் கொண்ட இடங்களுக்கான வழித்தடம் தொடர்பான ஈரோட மண்டல துணை வட்டாட்சியர் அவர்களின் முன் 22.5.2007 நாளிட்ட சம்மத வாக்குமூலத்தின்படி நடைமுறைப்படுத்தப்படாமல் சரியான நடைப்பாதை வசதி தற்போதும் இல்லாததாலும் ஆட்சேபணை காரணமாக வேறு வழியில் சர்விஸ் ஒயரை எடுத்து செல்ல இயலாத காரணத்தாலும் அச்சர்வீஸ் ஒயரை மாற்றுப்பாதையில் கொண்டு செல்ல மனுதாரர் மாற்று வழி காண்பித்தாலோ அல்லது வருவாய்த்துறையினரின் முன் 22.5.2007 அன்று சம்மதம் அளிக்கப்பட்ட வாக்குமூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு பொது நடைப்பாதையை நிர்ணயம் செய்யப்பட்டாலோ தான் மனுதாரர் கோரியபடி மின் இணைப்பு எண்.007–006–374ன் சர்வீஸ் ஒயரை மாற்றி அமைக்க இயலும் என்பதால் தான் மனுதாரர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு சமர்ப்பித்த 19.12.2014 அன்று பெறப்பட்ட மனு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

## 6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

6.1 மேல்முறையீட்டாளரும், எதிர் மனுதாரரும், தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக மின் குறைதீர்ப்பாளர் முன்பாக 6/5/2015 அன்று கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளரின் சார்பாக அவரின் கணவர் திரு. தங்க குண்டு கலந்து கொண்டு தம்முடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு.பி.மகேந்திரன், உதவி செயற் பொறியாளர், மேற்கு, ஈரோடு அவர்களும், திரு.பி.அன்பு செழியன், உதவிப் பொறியாளர், நசியனூர் அவர்களும் கலந்து கொண்டு தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

7. <u>மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி கேட்புரையின்பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>:

7.1 மேல்முறையீட்டாளரின் கணவர் திரு.தங்க குண்டு அவர்களது கேட்புரையில் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார். அவர் தன்னுடைய மனுவிலுள்ள வாதங்கள் மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 தற்பொழுது மாற்றி அமைக்க வேண்டும் என்று கோரிக்கை கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்பு எண்.007–006–374ற்கு மின் இணைப்பு வழங்கப்படும் பொழுது திரு. தங்க குண்டு அவர்கள், அவர்களுக்கு சொந்தமான நிலத்தில் சர்வீஸ் வயரை கொண்டு செல்ல அனுமதி 4/12/1987 ல் பஞ்சாயத்தார் அறிவுரையின்படி ஒரு ஒப்பந்தம் எழுதி அனுமதி கொடுக்கப்பட்டது என்றும் அந்த ஒப்பந்தத்தின்படி, மின் இணைப்பை பெறும் திரு.சத்திய ஜோதி அவர்கள், எதிர்காலத்தில் திரு. தங்க குண்டின் கட்டிடங்கள் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்யும் பொழுது மின் இணைப்பால் ஏதாவது இடையூறு நேர்ந்தால் அவருடைய சொந்த பொறுப்பில் மாற்றுவதாக உறுதி கொடுத்துள்ளார். எனவே அந்த மின் இணைப்பிற்கு செல்லும் மின் வயரை அகற்ற வேண்டும் என்றும் மாற்றுவழி ஏற்பாடு செய்வது திரு. சத்தியஜோதியின் பொறுப்பு என்று வாதிட்டார்.

7.3 மேலும், மின்வாரியம் கூறும் மாற்றுப்பாதையானது சர்வே எண் 483/6 என்ற அவருக்கு சொந்தமான நிலத்தின் வழியாக செல்ல வேண்டும். எதிர் மனுதாரர் கூறுவதுபோல் அது பொதுப்பாதை அல்ல எனவே அந்த மாற்றுப்பாதை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று வாதிட்டார்.

7.4 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி திருமதி எஸ்தர் அவர்களின் வீட்டிற்கு செல்ல அவர் தற்பொழுது உபயோகிக்கும் பாதை வழியாக மின்பாதை அமைத்தால் தனக்கு சம்மதம் என்று வாதிட்டார். மேலும் அவ்வாறு மின்பாதை அமைக்க தேவையான அனுமதியை பெறவேண்டியது திருமதி எஸ்தர் தான் என்று வாதுரை புரிந்தார்.

7.5 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி திருமதி எஸ்தர் அவர்கள் தற்பொழுது உபயோகிக்கும் பாதையை சம்பந்தமாக மண்டல துணை வட்டாட்சியர், ஈரோடு அவர்களின் முன்னிலையில் ஒரு ஒப்பந்தம், திரு தங்க குண்டு அவர்களுக்கும், திருமதி எஸ்தர் அவர்களுக்கும் 22/5/2007 அன்று போடப்பட்டுள்ளது என்றும், எனவே, அந்த வழியாக மின் பாதை அமைக்கலாம் என்றும் வாதிட்டார்.

7.6 மேலும், திருமதி எஸ்தர் அவர்கள் தன்னுடைய வீட்டிற்கு செல்வதற்கு தற்பொழுது உபயோகிக்கும் பாதையை உரிய வருவாய்துறை ஆணையை பெற்று உறுதிபடுத்தினால் அந்த வழிப்பாதையின் வழியாக மின்பாதை அமைக்கலாம் என்றும் வாதிட்டார்.

8. <u>எதிர்மனுதாரரின் பிரதிநிதி கேட்புரை நாளின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>:

8.1 உதவி செயற்பொறியாளர், மேற்கு ஈரோடு அவர்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 உதவி செயற்பொறியாளர் அவர்கள், வாரியம் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையின்படி மின் இணைப்பு எண் 007 006 374 சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க தயாராக உள்ளது என்றும் ஆனால் மாற்று வழிப்பாதையை அமைத்து தரவேண்டியது, மற்றும் அதற்கான செலவு தொகையை கட்ட வேண்டியது, சர்வீஸ் வயரை மாற்றகோரும் விண்ணப்பதாரர் செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

8.3 மேல் முறையீட்டாளருக்கும், திரு.சத்திய ஜோதிக்கும் உள்ள ஒப்பந்தத்தில் மின்சார வாரியம் சம்பந்தபடவில்லை. எனவே மேல்முறையீட்டாளர் தான், திரு. சத்திய ஜோதி அவர்களின் குடும்பத்தாரிடம் மேற்கண்ட ஒப்பந்தத்தின்படி மின்பாதையை மாற்றி அமைக்க மாற்றுப்பாதையை ஏற்பாடு செய்து தரும்படி கோரவேண்டும் என்றும் ஆட்சேபனையற்ற மாற்றுப்பாதையை தெரிவித்தால் மின் பாதை மாற்றி அமைக்க முடியும் என்று வாதிட்டார். திரு.சத்திய ஜோதிக்கும் திரு.தங்க குண்டுவிற்கும் இடையிலான ஒப்பந்தம், மின்வாரியத்தை கட்டுப்படுத்தாது என்று வாதுரை புரிந்தார்.

8.4 கிராம நிர்வாக அலுவலர் நசியனூர் அவர்கள் சான்று அளித்துள்ள நத்தம் நிலவரித் திட்ட தூய அடங்கல் பதிவேட்டின்படி சர்வே எண்.483/6 பாதை என்றுதான் பதிவு ஆகியுள்ளது. எனவே தான் எதிர்மனுதாரர் சார்பில், அந்த பாதை வழியாக மின் பாதை அமைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் மேல்முறையீட்டாளர், நீதிமன்ற தீர்வின்படி அது அவருக்கு சொந்தம் என்றும், அந்த நிலத்தின் வழியாக மின் பாதை அமைக்க ஆட்சேபனை செய்வதாலும், அந்த வழியாக மின்பாதை அமைக்க முடியவில்லை. மேலும் திருமதி. எஸ்தர் அவர்களும் 483/6 ன் வழியாக மின்பாதை அமைப்பதற்கு அந்த பாதையின் அகலம் மிகவும் குறைவாக இருப்பதால், அது பொது மக்களுக்கு இடைஞ்சலாக இருக்கும் என்றும், எனவே தான் சம்மதிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

8.5 மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ள ஈரோடு மண்டல துணை வட்டாட்சியர் முன் 22/5/2007 ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தப்படி உள்ள பாதை நடைமுறை படுத்தப்படவில்லை என்றும் , மேலும் அந்த ஒப்பந்தத்தில் திரு தங்க குண்டு அவர்களும் திருமதி எஸ்தர் அவர்களும் தான் கையெப்பமிட்டுள்ளார்கள். ஆனால் அதை தவிர சர்வே எண் 483/3 ன் உரிமையாளரின் அனுமதியும், சர்வே எண் 483/4 ன் உரிமையாளர் அனுமதியும் தேவைப்படுகிறது என்றும், அந்த வழியாக மின் பாதையை அமைக்கவும், ஆட்சேபனை உள்ளது என்றும் வாதிட்டார்.

8.6 மேலும் மாற்றுப்பாதை அமைக்க ஆட்சேபனைகள் உள்ளதால், மேல்முறையீட்டாளர் ஆட்சேபனையை நீக்கி அல்லது ஆட்சேபனை அற்ற ஒரு மாற்றுப்பாதையை தெரிவித்து அதற்கான மதிப்பீட்டு தொகையையும் செலுத்தினால் வாரியம் மேற்கண்ட சர்வீஸ் வயரை மாற்றத் தயாராக உள்ளது என்றும் வாதிட்டார்.

## 9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 இந்த வழக்கின் மேல் முறையீட்டாளர், திருமதி. எஸ்தர் அவர்களின் வீட்டிற்கு செல்லும் மின் இணைப்பு எண். 007–006–374 இன் சர்வீஸ் வயர், அவருக்கு சொந்தமான சர்வே எண். 483/9 ன் வழியாக செல்வதால் அதை மாற்றி அமைக்க வேண்டும் என்று மனு செய்துள்ளார்.

9.2 மேல்முறையீட்டாளர், திருமதி எஸ்தரின் வீட்டிற்கு மேற்படி மின் இணைப்பு வழங்கும்பொழுது, தான் ஆட்சேபனை செய்ததாகவும் பிறகு பஞ்சாயத்தார் முன்னிலையில் திருமதி எஸ்தரின் கணவர், சத்ய ஜோதிக்கும் திரு தங்க குண்டு அவர்களுக்கும் ஏற்படுத்திய ஒப்பந்தத்தின்படி, அப்பொழுது மின் இணைப்பு பெற அனுமதிக்கப்பட்டு, ஆனால், தனக்கு அந்த இடத்தில் கட்டம் கட்டும்பொழுது, அல்லது மாற்று பணிகள் செய்யும்பொழுது ஏதாவது இடையூறு நேர்ந்தால், அவரது சொந்த பொறுப்பிலேயே மாற்றி அவருக்கு எந்த நஷ்டமும் ஏற்படாமல் செய்து கொடுப்பதாக 4–12–1987 ல் சமரச உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, திரு. சத்திய ஜோதியின் மனைவியான திருமதி எஸதர் அவர்கள் தன்னுடைய வீட்டிற்கு வரும் சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க மாற்றுப்பாதை காண்பிக்க கடைமைபட்டவர் என்று வாதிட்டார்.

9.3 மேலும் வாரியம் பொதுப்பாதை என்று தெரிவித்து சர்வே எண். 483/6 ன் வழியாக மின் இணைப்பிற்கான சர்வீஸ் வயரை மாற்றி அமைக்கலாம் என்பதையும் அவர் ஆட்சேபனை செய்தார். சர்வே எண்.483/6 அவருக்கு சொந்தமான நிலம் என்றும் எதிர்மனுதாரர் வாதிடுவதுபோல் அது பொது வழியல்ல என்றும் வாதிட்டு, அதன் வழியாக மின் இணைப்பை மாற்றியமைக்க தன்னுடைய ஆட்சேபனையை தெரிவித்துள்ளார்.

9.4 மேல்முறையீட்டாளர் திருமதி எஸ்தர் அவர்கள் தன்னுடைய வீட்டிற்கு செல்வதற்காக உபயோகிக்கும் பாதை வழியாக மின்சார சர்வீஸ் வயரை அமைத்து சர்ச்சைக்குறிய மின் இணைப்பு எண்ணின் சர்வீஸ் வயரை மாற்றி அமைக்கலாம் என்றும், அதற்கு தேவையான ஒப்புதல்களை திருமதி எஸ்தர் தான் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**9.5** எதிர்மனுதாரர், திரு சத்திய ஜோதி அவர்கள் மேற்கண்ட மின் இணைப்பை பெறும்பொழுது, திரு தங்ககுண்டுவின் ஆட்சேபனையை நிவர்த்தி செய்வதற்காக பஞ்சாயத்தார் முன்பாக எழுதப்பட்ட சமரக உடன்படிக்கையில் வாரியம் ஒரு party அல்ல. எனவே, அந்த ஒப்பந்தத்தை சுட்டிக்காட்டி வாரியம், மாற்று வழி ஏற்படுத்த வேண்டும் என்று வாதிட முடியாது என்றும், அது உரிமம்தாரரை கட்டுப்படுத்தாது என்று வாதிட்டார். அந்த ஒப்பந்தத்தின்படி, திரு சத்ய ஜோதி அல்லது அவருக்காக அவர் குடும்பத்தினர் மாற்று பாதை அமைக்க உரிய அனுமதியை தகுந்த நபரிடம் பெற்று தெரிவிக்கலாம் என்றும் தெரிவித்தார். அவ்வாறு தெரிவிக்கும் பட்சத்தில் வாரியம் மின்பாதையை மாற்றி அமைக்கும் என்றும் வாதிட்டார்.

**9.6** மேலும் கிராம நிர்வாக அலுவலர், நசியனூர் அவர்கள் சான்று அளித்துள்ள நத்த நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேட்டின்படி சர்வே எண். **483/6** பாதை என்றுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே சர்வே எண்.**483/6** வழியாக மின் இணைப்பிற்கான சர்விஸ் வயரை மாற்றி அமைக்கலாம் என்று வாரியம் கருதுகிறது. ஆனால், திருமதி எஸ்தர் அவர்களும், அது குறுகலான சந்து எனவே அதன் வழியாக சர்வீஸ் வயரை அமைக்க தனக்கு சம்மதமில்லை என்று கூறியுள்ளார். மேல்முறையீட்டாளரும் அது அவருக்கு சொந்தமான இடம் அதன் வழியாக மின்பாதை அமைக்கக்கூடாது என்று தெரிவித்தார். எனவே, சர்வே எண்.**483/6**இன் வழியாக சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க முடியவில்லை என்று வாதிட்டுள்ளார்.

**9.7** மேலும், அடுத்த மாற்று வழியான, திருமதி. எஸ்தர் அவர்கள் தற்பொழுது தன்னுடைய வீட்டிற்கு செல்லும் வழிப்பாதையின் வழியாக சர்விஸ் வயரை கொண்டு செல்லவும் சர்வே எண். **483/2, 483/3** மற்றும் சர்வே எண்.**483/4**களின் உரிமையாளர்கள், ஆட்சேபனை செய்வதாக தெரிவித்துள்ளார். ஆனால், ஆட்சேபனை கடிதங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், மேல்முறையீட்டாளர், மாற்றுபாதை அமைக்க வழிவகை செய்து கொடுத்தால் சர்விஸ் வயரை அந்த ஆட்சேபனையற்ற வழிதடத்தின் வழியாக அமைக்க வாரியம் எப்பொழுதும் தயார் என்றும் வாதிட்டுள்ளார்.

**9.8** மேற்கண்ட இரண்டு தரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது இரண்டு மாற்றுபாதைகள் வழியாக சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க வழி உள்ளது. ஆனால் அதில் ஒருவழியான **483/6** என்ற சர்வே எண் வழியாக சர்வீஸ் வயரை கொண்டு செல்ல மேல்முறையீட்டாளர் தன்னுடைய நிலம், அது பாதை அல்ல என்று ஆட்சேபனை செய்துள்ளர். மேலும் மின் இணைப்பின் உரிமையாளரான திருமதி. எஸ்தர் அவர்களும் அது குறுகலான சந்து

எனவே அதன் வழியாக மின்பாதை அமைக்க ஆட்சேபனை செய்கிறார் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். எனவே, சர்வே எண்.483/6இன் வழியாக சர்வீஸ் வயரை மாற்றியமைக்க ஆட்சேபனைகள் உள்ளன என்று தெரிகிறது.

**9.9** அடுத்த மாற்றுவழி திருமதி. எஸ்தர் தன்னுடைய வீட்டிற்கு தற்பொழுது உபயோகித்துவரும் நடைபாதை வழியாக மின்பாதை அமைப்பது ஆகும். அந்த நடைபாதை **483/3**ல் வருகிறது. மேலும், **483/2, 483/4** மற்றும் **483/5** ஆகிய சர்வே எண்கள் அதன் அருகிலுள்ள சர்வே எண்கள் ஆகும். எதிர்மனுதாரர் **483/2, 483/4** ஆகியவற்றின் உரிமையாளர்கள் அந்த பாதையில் மின்பாதை அமைக்க ஆட்சேபனை செய்துள்ளார்கள் என்று வாதிட்டுள்ளார். மேல்முறையீட்டாளரும் ஆட்சேபனை உள்ளது என்பதை மறுக்கவில்லை. எனவே, மேற்கண்ட வழியாகவும் சர்வீஸ் ஒயரை மாற்றி அமைக்க ஆட்சேபனை உள்ளது என்று தெரிகிறது.

**9.10** ஒரு மின்பாதையை மாற்றி அமைப்து பற்றி தெரிந்து கொள்ள நாம் தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதி **5(6)**ஐ ஆராய வேண்டும். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"5. Miscellaneous charges***
*xxx xxx xxx*
*xxx xxx xxx*
***(6)Service / line, structure and equipments shifting charge***

*(1) The cost of shifting service / line, Structure and equipments shall be borne by the consumer. The consumer shall pay the estimated cost of shifting in advance in full. The copy of the estimate shall be given to the consumer. The shifting work will be taken up only after the payment is made.*

*The estimate will cover the following:—*

*i. Materials dismantled in the old site and reusable shall be used in the new site as far as possible.*

*ii. 10% of the present value of the dismantled and reusable materials towards charges for dismantling and charges for loading unloading transport to the new site/store.*

*iii. Cost of the new materials required for the shifting work.*

*iv. Add 5% of the cost of new materials towards loading unloading and transport to new site.*

*v. Add 10% of the present value of all the materials to be erected in the new site towards erection charges.*

*vi. 5% of the present value of retrievable scrap materials towards charges.*

*vii. Due credit shall be given to the consumer/applicant as below but however limited to the total estimated cost of new work.*

*(a) Book value/written down value subject to a minimum of 20% of the cost of retrievable and reusable materials but not used in the new site.*

*(b) Scrap value on the retrievable but not reusable materials at not less than 10% of its original value.*

*(viii) After completion of the work revised estimate shall be prepared with a copy to the consumer based on the actual cost of materials loading unloading transport and erection charges if the original estimate cost is more than the revised estimate the balance shall be refunded to the applicant/consumer within 3 months. If the original estimate cost is less than the revised estimate the difference shall be collected from the application/consumer."*

**9.11** மேற்கண்ட விதியை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, ஒரு மின்பாதையை மாற்றி அமைக்க வேண்டும் எனில், அதற்கு ஆகும் செலவு தொகையை மின்பாதையை மாற்ற கோரும் நுகர்வோர் செலுத்த வேண்டும் என்றும் அவ்வாறு செலவு தொகையை செலுத்திய பின்புதான் மின்பாதை மாற்றி அமைக்கப்படும் என்று தெரிகிறது.

**9.12** ஒரு மின்பாதையை மாற்றி அமைக்க வேண்டும் எனில் கீழ்கண்டவைகளை ஆராய வேண்டும்.

(i) தொழில்நுட்ப கூறின்படி மாற்றியமைக்க சாத்தியக்கூறு(Technical feasibility) உள்ளதா ?

(ii) மாற்றுப்பாதையில் மின்பாதை அமைக்க வழியுரிமை (Right of way) உள்ளதா ? மற்றும் (iii) மின் பாதையை மாற்றி அமைக்க ஆகும் செலவை யார் ஏற்றுக் கொள்ளவேண்டும் ?

**9.13** இந்த வழக்கில் எதிர்மனுதாரர் தொழில்நுட்ப கூறின்படி மின்பாதையை அமைக்க முடியாது என்று வாதிடவில்லை. எனவே, சர்வீஸ் வயரை மாற்றுவதில் தொழில்நுட்ப கூறுகளின்படி தடை இல்லை. மேலும், செலவு தொகையை ஏற்பதிலும் உடன்பாடு உள்ளது என்று தெரிகிறது ஆனால் மாற்றுபாதை வழியாக சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க ஆட்சேபனை உள்ளது என்று அறிய முடிகிறது.

**9.14** எதிர்மனுதாரர் சர்வீஸ் வயரை மாற்றியமைக்க ஆட்சேபனையற்ற மாற்றுபாதையை மேல்முறையீட்டாளர் தெரிவித்தால் சர்வீஸ் ஒயரை மாற்றி அமைக்க அவர்கள் தயார் என்று தெரிவித்துள்ளதாலும், மேல்முறையீட்டாளர் தான், சர்வீஸ் வயரை மாற்ற வேண்டும் என்று கோருவதால், அவர்தான் மின் இணைப்பு எண்.007–006–374 ற்கு சர்வே எண் 483/9 வழியாக தற்பொழுது உள்ள சர்வீஸ் வயரை மாற்றி அமைக்க ஆட்சேபனையற்ற ஒரு மாற்று வழியை தெரிவிக்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 10. <u>முடிவுரை</u>

**10.1** மேற்கண்ட 9.14பத்தியிலுள்ள தீர்வின்படி ஈரோடு மின்பகிர்மான வட்டத்தின் தீர்வில் மாற்றம் எதுவும் செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

10.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.23/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திருமதி. D. ஞானஜோதி (ஆசிரியர் பணிநிறைவு),
க/பெ. தங்க குண்டு,
56, சி.எஸ்.ஐ. வீதி,
நசியனூர், ஈரோடு மாவட்டம்

2) மேற்பார்வை பொறியாளர்,
ஈரோடு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, ஈ.வி.என். சாலை, ஈரோடு – 9

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
ஈரோடு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
984, ஈ.வி.என். சாலை, ஈரோடு – 9

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – <u>மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.